தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.5

நாள் 04.08.2026

| SC. No. | 132/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கரன் | க/பெ. | மணி |
| வயது | 53/26 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | தென்னாம்பட்டினம் | தாலுக்கா | சீர்காழி |

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர்.)**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

**முதல் விசாரணை** :–

நான் தென்னாம்பட்டினத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் நால்வரும் எனக்கு தெரியும். புகார்தாரர் அரவிந்த் என்னுடைய கொழுந்தியா மகன் ஆவார். 13.06.2019 அன்று இரவு 8.30 மணியளவில் அரவிந்த் எனக்கு போன் செய்து அப்போது SI சேகர் மருமகன் என்னை குணசீலன் திருவெண்காடு கோவிலுக்கு வர சொன்னதாக சொன்னார். என்னையும் வர சொன்னார். நானும் எனது மனைவி சீலாவும் திருவெண்காட்டிற்கு சென்றோம். நான் போகும் போது ஆஜர் எதிரிகள் பைப்பை வைத்து அடித்துக் கொண்டிருந்தார்கள். என்னை பார்த்தவுடன் அவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். பின்பு அரவிந்திற்கு வலது பக்க முன் முகத்திலும், பின் மண்டையில் கம்பியாலும், வயிற்று பகுதியில் கத்தி குத்தும் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டது. பின்பு அரவிந்தின் நண்பர் ராஜேஷ்க்கு தகவல் தெரிவித்து டாடா ஏசியில் அவர் வந்த பிறகு அரவிந்தை திருவெண்காடு மருத்துவமனையில் அழைத்து சென்றதாகவும், நான் இரு சக்கர வாகனத்தில் அவர்களை பின் தொடர்ந்து சென்றேன். பின்பு மேல் சிகிச்சைக்காக சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் அனுப்பி வைத்தார்கள். சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் 3 நாட்களாக உள் நோயாளியாக இருந்தார். அதன் பிறகு மேல் சிகிச்சைக்கு அழைத்து செல்வதாக சொன்னார்கள். எங்காவது

CJM, MAYILADUTHURAI.

M. சங்கர்.

பாருங்கள் என்று சொல்லிவிட்டு சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை</u>**

M. Selvi

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.